செ.வெ.எண்: 06 நாள்: 03.02.2018

**புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் 150 பயனாளிகளுக்கு ரூ.92,95,400 மதிப்பில் திருமாங்கல்யத்திற்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவித் தொகைகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சமூக நலத்துறையின் சார்பில் திருமாங்கல்யத்திற்கு தங்கம் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (01.02.2018) அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பயனாளிகளுக்கு திருமாங்கல்யத்திற்கு தங்கம் மற்றும் நிதி உதவித்தொகைகளை வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:

மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் அம்மா அவர்கள் பெண் கல்வியை ஊக்குவிக்கவும், ஏழை பெற்றோர்கள் தங்களது பெண் குழந்தைகளின் திருமணத்தை சிரமமின்றி நடத்தி வைக்கவும் இந்தியாவில் முதல் முறையாக தமிழ்நாட்டில் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். தமிழ்நாட்டில் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அன்னவாசல் மற்றும் விராலிமலை வட்டாரத்தில் உள்ள 10 மற்றும் 12-ஆம் வகுப்பு படித்த 67 ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.16,75,000 மதிப்பில் நிதியுதவி தொகை மற்றும் தலா 8 கிராம் வீதம் 536 கிராம் தங்கமும், பட்டம் மற்றும் பட்டயம் படித்த 83 எழைப்பெண்கள் திருமணத்திற்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.41,50,000 மதிப்பில் நிதியுதவி தொகை மற்றும் தலா 8 கிராம் தங்கம் வீதம் 664 கிராம் தங்கமும் என மொத்தம் 150 பயனாளிகளுக்கு ரூ.58,25,000 மதிப்பில் நிதியுதவி தொகையும், ரூ.34,70,400 மதிப்பில் 1200 கிராம் தங்கமும் என மொத்தம் ரூ.92,95,400 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 25 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகைக்கான ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசு பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன்படி பெண்கள் திருமணத்திற்கு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், கர்ப்பிணி பெண்களுக்கு ரூ.18,000 மதிப்பில் மகப்பேறு நிதியுதவித் திட்டம், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 14 வகையான கல்வி உபகரணம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. எனவே தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டுமென்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தலைவர் திரு.இரா.சின்னத்தம்பி, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், மாவட்ட சமூக நலஅலுவலர் திருமதி.ரேணுகா, வட்டாட்சியர் திரு.சோனை கருப்பையா, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.நாகராஜன், கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பி.சாம்பசிவம், முன்னாள் பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**